முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1140

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

12.11.2022, சனிக்கிழமை

1. பிரம்ம சக்தியே அரங்கா வாழ்க
   பிரணவ சக்திமிகு தேசிகா வாழ்க
   சரவணச் சுடரேற்றி உலகை காக்க
   சற்குருவாய் வந்த அரங்கனே வாழ்க
2. வாழ்க என வாழ்த்தி சுப்ரமணியர் யானும்
   வழங்குவேன் அரங்கனுக்கு ஞான அறிவுரை ஆசி
   ஊழ் போக்கும் கலியின் சிறந்த ஞானி
   உயிர்காக்கும் மாதவசி நீயப்பா
3. அப்பனே அரங்கனே உந்தனுள்
   ஆறுமுகன் யான் ஆற்றலாக இருந்து
   காப்பாக உலகை காக்கும் வழியாக
   கருணைகொண்டு அன்னதான சேவைதன்னை
4. சேவை தன்னை ஆறுமுகன் யானே
   சிறப்பாக உலகில் நடத்தி வருகின்றேன்
   மறுப்பின்றி அரங்கன் உன்னை ஏற்று
   மாதர்மத்தை செய்யும் மக்களெல்லாம்
5. மக்களெல்லம் இந்த பிறவி தனில்
   மகான் உன்னால் கடைத்தேற்றம் கண்டு
   ஆக்கமுடன் உலகையே மாற்றும்
   ஆறுமுகன் என் ஆசி பெற்றவர்களாக
6. ஆகவே உலகோர் சிறந்து இனிதே
   அரங்கன் உன்னால் ஞானிகள் ஆவரப்பா
   அப்பனே இந்த கலியுகத்தை
   அரங்கன் உன்னால் தான் மாற்ற முடியும்
7. ஒப்புகொண்டு யானே உன்னோடு அவதாரம்
   உயர்வாக நடத்தி காத்துவர
   வருகின்ற உன் செயல்கள் அனைத்தையும்
   வணங்கி எவர் போற்றுகின்றாரோ
8. தருகின்ற குணம் கொண்டு உன்வழி
   தர்மத்தை எவர் காத்து வருகின்றாரோ
   வருவோர் அனைவருமே இந்த கலியினில்
   வடிவேலன் என் அனுகிரகம் முழுமை கண்டு
9. பெருமைபட அரங்கன் உன் தேடல்வழி
   பிசகின்றி ஞானிகளாகி சிறப்பர்
   சிறப்பதோடு உலக மாற்றமெனும் சித்திமிகு ஞான ஆட்சியையும்
   அறத்தின் வழி கொண்டு உன் ஆற்றலால் அகிலத்தில் மாற்றம் புரிவர்

ஞான அறிவுரை ஆசி முற்றே —சுபம்—